04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
## ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Accredited with "B+" GRADE by NAAC

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

NAAC NATIONAL ASSESSMENT AND ACCREDITATION COUNCIL "B+" GRADE

### சண்முகா கல்லூரியில்
### வணிக நிர்வாகவியல் துறை சார்பாக
### ஒருநாள் மாநில அளவிலான கருத்தரங்கம்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின் வணிக நிர்வாகவியல் துறை சார்பாக ஒரு நாள் மாநில அளவிலான கருத்தரங்கம் **"Time and Money Management (நேரம் மற்றும் நிதி மேலாண்மை)"** என்ற தலைப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை தாங்கினார், செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னலை வகித்தார், பொருளாளர் **எ.ஸ்ரீதர்,** அறக்கட்டளை உறுப்பினர் திருமதி.**கே.குமுதா அருணகிரி,** கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்,** முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக வணிக நிர்வாகவியல் துறைத் தலைவர் பேராசியர் **எம்.சக்தி** அனைவரையும் வரவேற்றார். உதவிப்பேராசிரியை **பி.வித்யா** சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரி, வணிகநிர்வாகவியல் துறைத்தலைவர் பேரா.**எஸ்.ரகோத்தமன்** அவர்கள் கலந்து கொண்டு, நேரம் மற்றும் நிதி மேலாண்மை குறித்து மாணவர்களுக்கு, பணத்தையும், நேரத்தையும் எப்படி கையாளுவது என்பதைப் பற்றி தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் 350 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் செய்திருந்தனர். நிறைவாக பேராசிரியை **ஆர்.ஜாஸ்மீன்** நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வில் அனைத்துத் துறைத்தலைவர்கள், இருபால் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
NAAC
"B+" GRADE
ARTMENT OF BUSINESS ADMINISTRATION & IQAC
STATE LEVEL ONE DAY SEMINAR
ON
"TIME AND
MONEY MANAGEME
DATE : 21.03.2024.
ENUE : AUDITORIUM